# 55. திருவுடுப்பை.



*கலிநிலைத்துறை.*

*பண் - இந்தளம்.*

**ம**லையெ லாம்விளை யாடரு ளான்மலை மாமகள்
தலைவ னார்தலை மாமுளை தம்பி தவத்தினார்
அலைவி லாவித யாசன மீதம ராண்டவன்
உலைவி லாவடி வேல னிருப்ப துடுப்பையே. 1

**தே**வ சேனையை வேடர் குலத்துயர் செல்வியை
ஆவ லோடு மணந்துயிர் நன்மை யனைத்துமோர்
தாவி லாது பயந்து நிதப்பிரம சாரியும்
ஓவ லில்லியு மானவன் வாச முடுப்பையே. 2

**ச**ரைகொ ளாத சதாகதி சாரதி யாயமர்
புரையி லாயிர நூறு பெரும்பரி பூட்டிய
இரத மேலயி லேந்திறை யாக விருந்தமெய்
உரையி னான்பல வாடல்செய் தான முடுப்பையே. 3

**பி**ரம னாரருள் பேணிமுன் வைத்திடு பாதுகை
சரண நன்கு சுமக்க நடாவிய சாமியே
பரம னேயெமை யாள்கெனு நல்லவர் பாலுலாம்
உரமு ளானெனை யாள்குகன் வாச முடுப்பையே. 4

**இ**ந்தி ரன்றிகழ் சாமர மேந்தி யிரட்டவொண்
சந்தி ராதபர் வெண்டர ளக்குடை தாங்கமால்
அந்த ணன்மலர் மாரி சொரிந்திட வங்கைவேல்
உந்து சீரொ டெழுந்தவன் கோவி லுடுப்பையே. 5

**எ**ரியின் மன்பகல் வத்தி பிடித்திட வேமனார்
சுரிகை யேந்திட முக்கணன் மூவிலை தூக்கவால்
நிருதி காகள மூத வெழுந்தவ னீடொளி
உருவு ளான்மயி லீச னிருக்கை யுடுப்பையே. 6

**அ**ளகை யாளி யடைப்பை சுமக்கவு மங்ஙனே
கிளரு நீரிறை கேடில் படிக்கம தேந்தவும்
வளரு மேனையர் பீலி பிடிக்கவும் வந்தவார்ப்
புளர்சி லம்படி வேல னிருக்கை யுடுப்பையே. 7

**மா**ட்டி லேறு மகேசுரர் தந்தவொர் மாமணீ
காட்டி னாலறி வோமரு ளென்பவர் கட்டிடர்
வாட்டி யாள்கும ரேச னெனாது மயக்கெலாம்
ஓட்டி யாளரு ளாள னிருக்கை யுடுப்பையே. 8

---

6. ***முக்கண்ணர்*** = *திக்குப்பாலகரு ளொருவராய ஈசானமூர்த்தி.*

**நா**ங்க ணின்னடி நம்பிய வாவிக ளாயினாம்
ஈங்கெ மக்கருள் வாரில ரேணயி லீசனே
தாங்கி யாளென முன்னுநர் வாதை தபுத்துவாழ்
வோங்க வேசெயு மெந்தை யிருக்கை யுடுப்பையே. 9

**நீ**று மேலணி நேயர்க ணித்தலு மேத்துமோர்
ஆறு மாமுக னன்பரு ணைப்பெய ராரியன்
கூறு மாதுதி கொண்ட பிரானொரு கோதிலான்
ஊறி லானுயிர் நாத னிருக்கை யுடுப்பையே. 10

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 8ஆம் தேதி ஆதித்தவாரம்.